**கவனிக்க.**-2007.11.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1527 - 2007 දෙසැම්බර් 07 වැනි සිකුරාදා - 2007.12.07

1527 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1148 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1148 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 1150 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**-(i) கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தம்) சட்டமூலம் 2007, ஒற்றோபர் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2007, ஒற்றோபர் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2007, ஒற்றோபர் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, திசெம்பர் 14 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, நவெம்பர் 30 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## அனுராதபுரம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு

பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பொருட்கள் ஏலம் விடுதல்

அனுராதபுர பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட கீழே தரப்படும் பொருட்கள் 2007.12.15 ஆந் திகதி அனுராதபுர பொலிஸ் நிலைய இடத்தில் காலை 10.00 மணிக்கு பிரசித்தமாக ஏலம் இடப்படும்.

பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பொருட்கள் 2007.12.14 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அனுராதபுர பொலிஸ் நிலைய இடத்தில் பரிசீலனை செய்ய முடியும். ஏலம் விடும் இடத்திற்குள் பிரவேசிக்கும் போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆளடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

ஏலத்தில் பெறப்பட்ட பொருட்களுக்கு அன்றைய தினமே பணம் செலுத்தி பொது 172 படிவத்தைப் பெற்றுக்கொள்வதுடன் பொருட்களை அன்றைய தினமே பொலிஸ் நிலைய இடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும். அகற்றிக் கொள்ளாத பொருட்கள் சம்பந்தமாக எவ்வித பொறுப்புக்களும் வகை சொல்லப்படமாட்டாது.

ஈ. கே. வீ. மெகர்த்தி பெரேரா,
பிரிவு பொறுப்பு பொலிஸ் அத்தியட்சகர்,
அனுராதபுர - பிரிவு.

பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம்,
அனுராதபுரம்,
2007.11.16.

| தொடர் இல. | பொருட்களின் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | டியூப் பல்ப் செட் | 26 |
| 2. | இலந்தர் | 05 |
| 3. | மின்மணி | 01 |
| 4. | ஆமைப்பூட்டு | 06 |
| 5. | மண்வெட்டி தகடு | 12 |
| 6. | கேஸ் அடுப்பு | 03 |
| 7. | வானொலி இயந்திரம் | 01 |
| 8. | நெருப்பு அணைக்கும் உபகரணம் | 04 |
| 9. | நாம்புலி | 03 |
| 10. | புல்வெட்டும் இயந்திரம் | 01 |
| 11. | பெரிய பஞ்சர் | 01 |
| 12. | எரியும் இலாம்பு | 05 |
| 13. | மேசைக் கத்தி | 04 |
| 14. | பல்வித குடம் | 02 |
| 15. | மெகா போன் | 01 |
| 16. | மெகா லைட் | 01 |
| 17. | இரும்பு கட்டில் (இரட்டை) | 13 |
| 18. | இரும்பு கட்டில் (தனி) | 13 |
| 19. | மேஸ் டின் | 61 |
| 20. | இரும்புக் கதிரை | 43 |
| 21. | தட்டச்சு ஆங்கிலம் | 01 |
| 22. | தட்டச்சு சிங்களம் | 03 |
| 23. | தட்டச்சு மேசை | 01 |
| 24. | இரும்பு பெட்டி | 01 |
| 25. | இரும்பு சங்கிலி | 01 |
| 26. | கலர் தொலைக்காட்சி பெட்டி | 04 |
| 27. | மூன்று வாரி (ரேக்கை) | 01 |
| 28. | மின் விசிறி | 04 |
| 29. | ரெகுலேட்டர் | 20 |
| 30. | அதி குளிர்சாதனப்பெட்டி | 03 |
| 31. | சாஸ்பான் சிறியது | 05 |
| 32. | ஹெலஜன் இலாம்பு செட் | 82 |
| 33. | இருக்கும் திருவலை | 18 |
| 34. | மின் திருவலை | 02 |
| 35. | அவசர மின் குமிழ் | 01 |
| 36. | வில்பெரோ | 01 |
| 37. | வீசுக் கத்தி | 03 |
| 38. | கல்தேரம் (பெரிய சாடி) | 60 |
| 39. | ஆண் மிதி வண்டி | 38 |
| 40. | கோடரித் தகடு | 11 |
| 41. | தொலை நகல் (பெக்ஸ் இயந்திரம்) | 01 |
| 42. | செட் ரேடியோ | 04 |
| 43. | கராம்பை | 05 |
| 44. | வாலி சிறியது பெரியது | 41 |
| 45. | பெரிய வாள் | 03 |
| 46. | பெண்டர் | 01 |
| 47. | நீர் வடி இயந்திரம் | 36 |
| 48. | மின் விளக்கு | 23 |
| 49. | மின் கேத்தல் (இரும்பு) | 07 |
| 50. | நீர்த் தாங்கி | 04 |
| 51. | தண்ணீர் இயந்திரம் | 03 |
| 52. | மேசை மின் விசிறி | 07 |
| 53. | மின்சார நீர் கொதி இயந்திரம் | 14 |
| 54. | டியூப் பல்ப் செட் (4 அடி) | 04 |
| 55. | 1000 வோல்டேஜ் லாம்பு | 06 |

12-112

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோனித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

தலவத்துகொட, வெலிபார 502 ஆம் இலக்கத்தில் வசிக்கும் கொலுபத்திரகே பிரேமதிலக கல்தேர ஆகிய நான், கொழும்பு நொத்தாரிசு நூராணி அமரசிங்க முன்னிலையில் 2006.09.07 ஆந் திகதி 70 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய அற்ரோனித் தத்துவப் பத்திரத்தின் மூலம் அற்ரோனியாக நியமிக்கப்பட்ட தலவத்துகொட, வெலிபார 502 ஆம் இலக்கத்தை சேர்ந்த, தற்போது பொல்கஸ்விற்ற, மன்ரேகொட புவுது மாவத்தை 38/1 இல் தற்போது வசிக்கும் பெலவந்ரகே நிரோஷினி பெரேராவுக்கு வழங்கப்பட் அற்ரோனித் தத்துவத்தை இத்தால் அழித்து பலனற்றதாக செய்துவிடுகின்றேன்.

மேலும் பொதுமக்களின் கவனத்துக்கு, மேற்குறித்த தத்துவத்தின் பேரால் செய்யப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல் மற்றும் நடைமுறைகளுக்கு நான் பொறுப்பில்லை, என்பதையும் இத்தால் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கொலுபத்திரகே பிரேமதிலக கல்தேரா.

12-10

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் கொழும்பு 7, கின்ஸி வீதி, 68 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஏர்மா மகேஸ்வரி போல் ஆகிய நான், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சாந்தி தோமஸ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 7739, Burnt Qak Tril Jacksonville F L 32256 U. S. A. என்னும் முகவரியைச் சேர்ந்த சிவந்தா ராஜ்குமார் ஜயராஜன் போல், 28, Rochester Road, Canterbury, Victoria, 3126 Australia என்னும் முகவரியைச் சேர்ந்த டாக்டர் ஷிக்காந்தினி தயயிட்டா ஜோசப், 139,Springvale Road, Glenwaverly, Victoria, 3150 Australia என்னும் முகரியைச் சேர்ந்த அமர்ஜித் ஜஸ்வந்த் போல், 14, Wahroonga Avenue, Wahroonga N. S. W. 2076, Australia என்னும் முகவரியைச் சேர்ந்த அவிந்தர் ஸ்ரீதர் போல் ஆகியோருக்கு வழங்கப்பட்டதுமான 2001, ஒற்றோபர் 12 ஆந் திகதிகொண்ட 589 ஆம் இலக்க அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கவும் வறிதாக்கவும்படுகின்றது எனப் பொது மக்களுக்கும் மேற்படி குடியரசின் அரசாங்கத்திற்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

ஏர்மா மகேஸ்வரி போல்.

12-11

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைத்தல் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 6 ஆந் திகதி கூட்டிணைக்கப் பட்ட ஹேலங்கா வொக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) ஐப் பின்பற்றி, கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் பெயர், கம்பனி இலக்கம் மற்றும் முகவரி பற்றிய பகிரங்க அறிவித்தல் இத்தால் கொடுக்கப்படுகிறது:

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் : | ஹேலங்கா வெக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் |
| கம்பனியின் இலக்கம் : | பி வி 61942 |
| கூட்டிணைக்கப்பட்ட திகதி : | 2007, நவெம்பர் 6 |
| கம்பனியின் முகவரி : | தளம் 6, அக்செஸ் டவர்ஸ், இல. 278, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 பணிப்பாளர். |

சபையின் கட்டளைப்படி,

பணிப்பாளர்,
பி. ஆர். செக்கிரட்டேரியல்
சேர்விஸஸ் (ப்ரைவட்) லிமிட்டட் .

2007, நவெம்பர்.

12-27

---

## அட்டோர்னித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 06, ஸ்டபர்ட் அவெனியூ, இல. 12 இல் வசிக்கும் (தேசிய அடையாள அட்டை இல. 460112141 V கொண்ட) நாஸிர் ஹுசைன் கணி ஆகிய நான், கொழும்பு 6, 32 ஆவது லேன், இல. 31 ஐச் சேர்ந்த மொஹமட் முஆஸ் மொஹிதீன் முபாரக் என்பவருக்கு வழங்கியதும், கொழும்பு பகிரங்க நொத்தாரிசு அஸாட் ரஹீமினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டதுமான, 1981 யூன் 27 ஆந் திகதிய 2703 இலக்க அட்டோர்னி தத்துவத்தை உடனடியாக அமுலுக்கு வருமாறு ரத்து செய்து இல்லாதொழிக்கிறேன் என்பதை இலங்கை அரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத் தருகிறேன். இதன்பிறகு என்சார்பாக அவரால் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன்.

என். எச். கணி.

12- 45

---

## அறிவித்தல்

மாஸ் ரிசேர்ச் அன்ட் இனோவேஷன் (பிரைவட்) லிமிட்டெட் 2007, நவெம்பர் 9 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் : | மாஸ் ரிசேர்ச் அன்ட் இனோவேஷன் (பிரைவட்) லிமிட்டெட் |
| கம்பனியின் இலக்கம் : | பி வி 61964 |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : | 10 ஆம் மாடி, ஹேமாஸ் ஹவுஸ், 75, பிறேபுறூக் பிளேஸ், கொழும்பு 02 |

சபையின் கட்டளைப்படி,
கோபரேட் சேர்விஸஸ் லிமிட்டட்,

செயலாளர்கள்.

மாஸ் ரிசேர்ச் அன்ட் இனோவேஷன் (பிரைவட்) லிமிட்டெட்.

12-79

---

## அட்டோர்ணி தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்தல்

இத்தால் இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் தெரிவிப்பதாவது, தற்பொழுது மக்கோன மகல்கந்தை, குருந்துவத்தை பூசாபதுகே, இலக்கம் 251எல்-1, முன்னர் எல்பிட்டிய-நாவந்தகல அட்டகொஹேட்ட, சாந்தகெலும், இலக்கம் 370-14-1 ஆகிய முகவரிகளையுடைய கலுப்பெருமா ஹர்ஷிக்கா தில்ருக்ஷி த சில்வா (தே. அ. அ. இலக்கம் 848151122 V) ஆகிய நான், எல்பிட்டிய நவந்தகல அட்டகொஹோட்ட சாந்தகெலும் முகவரியுடைய திரு. பாலஹெட்டி ஜயசிங்க என்பவருக்கு இலக்கம் 853 உடையதும், 2007 ஆம் வருடம் ஆடி மாதம் 11 ஆந் திகதி (11.07.2007) பிரசித்த நொத்தாரிசு முனிதாச ஹல்பந்தெனிய என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான அட்டோர்ணி தத்துவப்பத்திரத்தை 2007 ஆம் வருடம் ஐப்பசி மாதம் 3 ஆந் திகதி முதல் (03.10.2007) என்னால் இரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியற்றதாகிவிட்டதாக இத்தால் அறியத்தருகின்றேன். எனவே மேற்சொல்லப்பட்ட அட்டோர்ணி தத்துவப்பத்திரம் வைத்திருந்தவரிடம் எவராவது கொடுக்கல் வாங்கல் நடைமுறைகள் செய்து

கொண்டால் 03.10.2007 ஆந் திகதி முதல் நான் பொறுப்பில்லை என்றும் இத்தத்துவப் பத்திரம் செல்லுபடியற்றதென இத்தால் அறியத் தருகின்றேன்.

கலுப்பெருமா ஹர்ஸிக்கா தில்ருக்ஸி த சில்வா.

12-89

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*கம்பனியின் பெயர் :* ஜுப்பிட்டர் டிரேடிங் லங்கா (பிரைவேட்) லிமிடெட்
*கம்பனியின் இலக்கம் :* பிவி 62056
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2007.11.16
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல. 101, (4 ஆம் மாடி), சிற் கதிரேசன் வீதி, கொழும்பு 11

சபையின் கட்டளைப்படி,

செயலாளர்கள்,
வ/ப அமல்கமேற்றற் மனேஜ்மன்ற் சேர்விசஸ் (தனியார்),

96 - 2/2, மல்வத்தை ரோட்,
கொழும்பு - 11,
2007, நவெம்பர் 20.

12-135

---

## 2007 ஆம் ஆண்டின் கம்பனிச் சட்டத்தின் 9 (1) பிரிவின் கீழான அறிவித்தல்

*கம்பனியின் பெயர் :* Sahaya Corporate Services (Private) Limited
*கம்பனி பதிவு இல. :* PV 62019
*கூட்டிணைக்கப்படும் திகதி :* 2007, நவெம்பர் 14
*பதிவு அலுவலகம் :* இல. 23A 1/1, சுலைமான் அவெனியூ, கொழும்பு 5.

கம்பனி செயலாளர்.

12-139

## மாற்றீடு அட்டர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

சிலாபம், குருநாகல் வீதி, இல. 125 ஐச் சார்ந்த ஸ்ரீ லங்கா ஹேவகே வருண சந்திரலால் ஆகிய எனக்கு, வர்ணகுலசூரிய போருதொட்டகே சனத் ரோஹன் கிளிபட் பர்னாந்துவினால் வழங்கப்பட்ட அட்டர்ணி தத்வத்தின் பிரகாரம் பங்கதெனிய தெமட்டபிட்டியவை சார்ந்த சிங்ககுட்டி முதியான்சேலாகே கருணாவதி என்பவருக்கு சிலாபம் பிரசித்த நொத்தாரிசு எம். எம். சந்திரசேன அவர்களால் அத்தாட்சிசெய்யப்பட்ட 1625 இலக்கமும் 2001.09.04 ஆந் திகதியு முடைய மாற்றீடு அட்டர்ணி தத்துவ பத்திரத்தின் மூலம் நான் வழங்கிய சகல தத்துவங்களையும் 2007.07.20 ஆந் திகதி முதல் இரத்துச் செய்துவிட்டேன் என்பதை இதனால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும், பொதுமக்களுக்கும் அறிவிப்பதுடன் இவ்வாறு இரத்துச் செய்த தேதிக்குப் பின்னர் இம்மாற்றீடு பத்திரம் மூலம் அவர் மேற்கொள்ளும் எந்த கொடுக்கல் வாங்கல்களுக்கும் செயல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவிக்கின்றேன்.

ஸ்ரீ லங்கா ஹேவகே வருணசந்திரலால்.

2007.09.29.

12-145

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் அறிவித்தல்

டொயோன் கன்ஸல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் - பதிவு இல. பி. வி. 61872 ஐக் கொண்டுள்ள இக் கம்பனி 2007, நவெம்பர் 01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :* இல. 29/2, கிரீன்பீல்ட் பார்க், மாதிவெல, கோட்டே.

கம்பனி செயலாளர்.

12-146

---

# ஏல விற்பனைகள்

## றுஹுனு அபிவிருத்தி வங்கி - தல்கஸ்தவ கிளை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் வழங்கல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 வது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

**தென்மாகாணத்தின் காலி மாவட்டத்தில் கங்கபத்துவ வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கோனகொலகொடயில் அமைந்துள்ள அகபி. 613 என்ற வரைபடத்தின் இலக்கம் 72 பீ. கிவ் என்ற ஊருமுல்லகந்த எனும் ஒரு ஏக்கர் ஒரு பேர்ச்சஸ் (1ஏ.0றூ.7பே.) கொண்ட மிகப்பெரிய காணி அதில் அடங்கியுள்ள பயிர்ச்செய்கை போன்ற அனைத்துடனும் ஏல விற்பனை.**

றுஹுனு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் கீழ்க்குறிப்பிடுகின்ற சொத்துக்கள் 2007.12.27 ஆந் திகதி மு. ப. 11.30 க்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்

**மேலதிக விபரங்களுக்கு.-** 2005.09.09 ஆந் திகதியின் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலும், 2005.10.07 ஆந் திகதியில் "தினமின", "த ஐலன்ட்", "தினகரன்" போன்ற சஞ்சிகைகளிலும் பார்க்கலாம்.

**சொத்துக்கள் பற்றிய விவரணம்.-** மாபலகமையிலிருந்து கி. மீ. 1/2 அளவு செல்ல தல்கஸ்விலயிலிருந்து கோனலகொகொடைக்கு

திரும்பும் சந்தி தென்படும். அங்கிருந்து இடப்பக்கமாக இருக்கும் கோனலகொட பாதையில் கி. மீ. 3 அளவு தூரம் செல்ல கம்மெத்தகொட கம தென்படும். அங்கிருந்து தென்பக்கமாக இருக்கும் மண் பாதையில் கி. மீ. 1 / 2 அளவு செல்ல இச் சொத்துக்களை காணலாம்.

**கட்டணம் செலுத்தும் முறை.**– ஏல விற்பனை தீர்த்துவிட்டதும் கீழ் குறிப்பிட்டபடி பணத்தை கொள்வனவாளரினால் செலுத்தவேண்டும்.

1. கொள்வனவு விலையில் 25% ;
2. உள்ளூர் அதிகாரியின் வரியாக விற்பனை விலையில் 1% ;
3. ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2% ;
4. இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
5. ஏலவிற்பனை செலவும், வேறு செலவுகள் இருப்பின் அவையும்,

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை ஏலவிற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை, பம்புரண அனகாரிக தர்மபால மாவத்தை, இலக்கம் 382ஏ, ருஹுன அபிவிருத்தி வங்கி தவிசாளர்" க்கு செலுத்தவேண்டும்.

மேலே குறிப்பிட்டபடி 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் குறிப்பிட்ட பணத்தை தற்போதைக்கு கொள்வனவு விலையில் செலுத்திய 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாதுவிடவும், மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு. உரிமைகோறும் ஒப்பினையையும் வேறு விபரங்களையும் மேலும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம்பெற்ற ஏல விற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம, மாத்தறை.
தொலைபேசி இல.: 041-2228731

12-25

---

## வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் – அளுத்கடை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

### பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எஃப். டயஸ் என்பவரால் 2002.08.04 ஆந் திகதியிடப்பட்டு வரையப்பட்ட வரைபட இல. 1552 சீ இல் துண்டு "சீ" எனக்குறிக்கப்பட்ட காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் பொல்கஸ்மேலந்த என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டானது கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்துமுடன் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம்கோரளை பள்ளேபற்றுவில் கடுவெல பிரதேச சபை எல்லைக்குள் கடுவெலப் பிரிவு மாலபேயில் அமைந்துள்ளது. அத்துடன் 2004.10.07 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 2225 இன் இரண்டாவது அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதைக்கான உரிமையுண்டு.**

**காணியின் விஸ்தீரணம்– 10.80 பேர்ச்சஸ்**

*(கடமைப்பட்டவரும் சொத்தை ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்தவருமான வேலப்பு நைதலகே விலான் சம்பத் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். சீ. ஜயவர்தனா அவர்களால், 2004 ஒற்றோபர் 04 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 2225 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், மேலே விவரிக்கப்பட்ட சொத்தை, அதே இடத்தில், 2007 திசெம்பர் 27 மு. ப. 11.00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில், நான் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.***– 2007.09.21 ஆந் திகதியஅரசாங்க வர்த்தமானியையும் 2007.10.11 ஆந் திகதிய "ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**– ஏலத்தினிறுதியில், சித்திகரமான கொள்வனவாளர், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்தல் வேண்டும்:

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூராட்சி சபைகளுக்கான கட்டணம் 1% ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக, கொள்வனவு விலையின் 2 1/2;
(4) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 2000 ;
(5) கிளார்க் மற்றும் கூவுவோர் கட்டணமாக ரூபா 500 ;
(6) மொத்த விளம்பரச் செலவு.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள், கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்யப்படல் வேண்டும். 30 நாட்களுக்குள் வைப்பிலிடப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்திய தொகையைப் பறிமுதல் செய்து, சொத்தை மீள விற்பனை செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

மேலதிக விவரங்கள், காணி உறுதி, தொடர்புடைய ஆவணங்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் தலைமை அலுவலக கடன் மேற்பார்வை மற்றும் மீளப்பெறுகைத் திணைக்கள பிரதம முகாமையாளரைத் தொடர்பு கொண்டு பரீட்சித்துப் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 2661815, 2661816.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ரஞ்சித் எஸ். மஹநாம,
சமாதான நீதவான் (அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர்,
மதிப்பீட்டாளர், ஏலதாரர்.

மஹநாம ட்றைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே
தொலைபேசி இல.: 2863121.

12- 108/1

**கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிடெட் - முகத்துவாரம் கிளை**

**பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களை அதே இடத்தில் என்னால் 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.*

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் மோதர வாட் இலக்கம் 2, இலக்கம் 732 கே சிரில் சி. பெரேரா மாவத்தை (முன்பு புலுமண்டல் வீதி) என்ற நில அளவையாளர் ஜி. டப்ளியூ. டி சொயிசாவின் 15.09.1923 வரைபடம் இலக்கம் 261 இல் காண்பிக்கப்பட்ட காணி துண்டின் லொட் A என்ற காணி துண்டும் அதில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாம் சேர்த்து. இக்காணியின் விஸ்தீரணம் பன்னிரெண்டு தசம் ஒன்பது சைபர் பேர்சஸ் (0ஏ. 0றூ.12.90பே.)**

*(கடன் எடுத்த/காணியை ஈடுவைத்த உசன் மொகமட் ரயிமா பேகம் அல்லது அசன் மொகமட் ரயிமா பேகம் மற்றும் மொகமட் சித்தீக் காஜா நஜிமுடீன் என்பவர்கள் மேற்படி ஆதனத்தை கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டட்டிற்கு ஈடுவைத்துள்ளனர்.)*

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.-** *தயவு செய்து 23.02.2007 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும் 26.02.2007 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் விளம்பரத்துக்காக 7.12.2007 ஆந் திகதியுடைய "திவயின", "த அயிலன்ட்", "தினகரன்" பத்திரிகைகளையும், 07.12.2007 திகதியுடைய "லங்காதீப", "தஅயிலன்ட்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்.-** *கொழும்பு கோட்டையில் இருந்து புறக்கோட்டை மூலம் மஹா வித்தியால மாவத்தை, ஜோர்ஜ் ஆர். டி. சில்வா மாவத்தை கே. சிரில் சி பெரேரா மாவத்தையூடாக காணியை அடைய முடியும்.*

**கட்டணம் செலுத்தும் விதம்.-** *ஏல விற்பனையின் இறுதியில் உத்தேச கொள்வனவுகள் பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும் :*

*(1) கொள்வனவு விலையில் 10% ;*

*(2) உள்ளூராட்சிக்கான விற்பனை வரி 1% ;*

*(3) ஏலதாரரின் தரகு பணமான 2.5% ;*

*(4) விற்பனைப் பத்திரத்தை தயாரிப்பதற்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2000 ;*

*(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;*

*(6) ஏலவிற்பனை நிமித்தம் விளம்பரத்துக்காக செலவு செய்யப்பட்ட முழுத்தொகையும் ;*

*(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கமர்ஷல் பாங்க ஒப் சிலோன் முகத்துவாரம் கிளையில் அல்லது பிரதான காரியாலயத்தில் செலுத்த வேண்டும்.*

*வேறு விபரங்களையும் உரித்து உறுதிகளையும் மற்றும் தொடர்பு ஆவணங்களையும் பின்வரும் காரியாலத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். முகாமையாளர், கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டட், இலக்கம் 677, அலுத் மாவத்தை வீதி, கொழும்பு 5. தொலைபேசி 2522559, 2467057, 2522553 பக்ஸ் இல. 2522557*

*எல். பி. சேனநாயக்க,*
*(சமாதான நீதவான்)*
*முத்த உத்தரவு பெற்ற ஏலதாரர்,*
*விலை மதிப்பிடுநர் கொழும்பு மாவட்ட நீதிமன்றம்*
*மற்றும் வர்த்தக மேல் நீதி மன்ற ஆணையாளர்*
*அரசாங்க மற்றும் வர்த்தக வங்கிகளின் மூத்த*
*உத்தரவு பெற்ற ஆணையாளர்.*

*99, புதுக்கடை வீதி,*
*கொழும்பு 12.*
*தொலைபேசி/பக்ஸ் : 2445393*

*12-114*

---

**வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி - திம்பிரிகஸ்யாய கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, பள்ளேபற்று, கடுவளை பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹோகந்தரவில் அமைந்துள்ளதும் "வெல்லன்கிரிய எஸ்ட்டேட்" என அழைக்கப்படும் காணியின் உள்ளிருந்தும் புறமுகமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டி. ஜீ. வீரசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு, 1999, நவெம்பர் 8 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1657 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 32 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பி. டி. ரி. தர்மதிலக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2003, யூலை 3 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 588 இன் 2 ஆம் இலக்க அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வழியுரிமையுடன் சேர்த்து ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 10.71 பேர்ச்சஸ்கள்)**

*(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பி. டி. ரி. தர்மதிலக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 2003, யூலை 3 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 588 இன்மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவரான கமல்நீல் சேனக்க சிதன்த ரத்வத்தேயினால் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

*வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007, திசெம்பர் 28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.*

***தீர்மான அறிவித்தலுக்கு.***–*2006, ஒற்றோபர் 13 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006, ஒற்றோபர் 26 ஆந் திகதிய "ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**–வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :–

(1) கொள்வனவு விலையின் 10% (பத்துவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 (இரண்டரை வீதம்) ;

(4) விற்பனையில் உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள் ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000.

கொள்வனவு விலையில் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்)த ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக்கு செலுத்தல் வேண்டும். எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையை 10% (பத்து வீதம்)ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, 'எச். என். பி. கோபுரங்கள்', வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி, பிரதம முகாமையாளர் (அறவீடுகள்), தொலைபேசி இல. : 2661815, 2661816. அல்லது முகாமையாளர் - திம்ரிகஸ்யாய கிளை, தொலைபேசி இலக்கங்கள் : 4519862, 2582606" இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ரஞ்சித் எஸ். மஹநாம,
(சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர்,
விலை மதிப்பீட்டாளர், உஉத்தரவுபெற்ற
ஏலதார்.

ஆர்.எஸ். எம். ஒக்ஷன்ஸ்,
மஹநாம ட்றைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே
தொலைபேசி இல. 2863121.

12- 108/2

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 2.30 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5 என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.**

### அட்டவணை - 2007

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 07.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.11.2007 |
| | | வெள்ளி | 14.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.11.2007 |
| | | வியாழன் | 20 .12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.12.2007 |
| | | வெள்ளி | 28.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.12.2007 |

### அட்டவணை - 2008

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 04.01.2008 | .. | நண்பகல் 12 | வியாழன் | 20.12.2007 |
| | | வெள்ளி | 11.01.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.12.2007 |
| | | வெள்ளி | 18.01.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.01.2008 |
| | | வெள்ளி | 25.01.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.01.2008 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 01.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.01.2008 |
| | | வெள்ளி | 08.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.01.2008 |
| | | வெள்ளி | 15.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.02.2008 |
| | | வெள்ளி | 22.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.02.2008 |
| | | வெள்ளி | 29.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.02.2008 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.